தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# கூடங்குளம் அணுஉலைக் கழிவை கொட்டும் இடகட்டுமானம்: ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளதா?

# திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி

புதுடெல்லி, பிப்.8

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட அணு உலைக் கழிவுகளைக் கொட்டுவதற்கான இட கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?

கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இதற்கான பணிகளை நிறைவு செய்ய துவக்கத்தில் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் தகவல் உண்மையா? அவ்வாறு திட்டமிடப்பட்டிருந்தால் அந்த கட்டுமானப் பணிகளில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

**இது தொடர்பாக மக்களவையில் வியாழக்கிழமை அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட சிறிய அளவிலான பாதிப்புகள் காரணமாக கடந்த காலங்களில் அணு உலை மூடப்பட்டதாகக் கூறப்படும் தகவல்

உண்மையா? அவ்வாறெனில் அந்த பாதிப்புகள் குறித்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

அணு உலைக் கேள்விகளை கொட்டுவதற்கான இடமின்மை காரணமாக சுற்றுப்புறங்களில் ஏற்பட்டுள்ள எதிர்மறை விளைவுகள் குறித்து அறிந்து கொள்வதற்காக ஆய்வுப் பணிகள் ஏறும் மேற்கொள்ளப்பட்டதா? அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பியய கேள்விக்கு ஒன்றிய அரசின் பணியாளர் துறை, பொதுமக்கள் குறை தீர்வு மற்றும் ஓய்வூதியத் துறை (பிரதமர் அலுவலகம்) இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அளித்த பதில் விவரம் வருமாறு:**

கூடங்குளம் அணு மின் நிலையத்தின் மூன்று இரட்டை யூனிட்கள் ஒவ்வொன்றிலும் அணு உலைக் கழிவுகள் கொட்டுவதற்கான (ஏஎப்ஆர்) வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அங்கு சேமிக்கப்படும் அணு உலைக் கழிவுகள் மீண்டும் பதப்படுத்துவதற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. கூடங்குளம் அணு மின் நிலைய திட்டத்தின் மூன்றாவது நான்காவது யூனிட்டுகளில் ஏஎப்ஆர் வசதி வரும் 2026 ஆண்டு நடைமுறைக்கு வரும் என திட்டமிடப்பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் மற்றும் இரண்டாவது யூனிட்டில் ஏஎப்ஆர் வசதி கடந்த ஏப்ரல் 2022 ஆம் ஆண்டு நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட மாநில

அதிகாரிகள் ஏற்பாடு செய்த பொதுமக்கள் கருத்தறியும் கூட்டம் நடைபெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் மற்றும் இரண்டாவது ஏஎப்ஆர் வசதி கட்டுமானப் பணியில் தாமதம் ஏற்பட்டது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பராமரிப்பு பணி மற்றும் எரிபொருள் நிரப்பும் நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக அணு உலை கடந்த காலத்தில் மூடப்பட்டிருந்தது எந்த ஒரு அணு மின் நிலையத்திலும் இது போன்று வழக்கமான பராமரிப்பு பணிகளும் எரிபொருள் நிரப்பு பணிகளும் நடைபெறுவது வாடிக்கையாகும் மூடப்பட்டிருந்த காரணத்தால் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

******